# திராவிடப் போராளிகள் 25

■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## மூன்று இயக்கங்களின் செல்லத் தோழர்!

ஓவியம் : ரவிபேலட்



சமூகநீதி வரலாற்றில் **நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், பட்டியலினங்களின் கூட்டமைப்பு** ஆகிய மூன்று இயக்கங்களின் செல்லப் பெண்ணாகத் திகழ்ந்த ஒருவர் உண்டென்றால், அவர்தான் அம்மையார் **மீனாம்பாள் சிவராஜ்** அவர்கள்.

பர்மாவின் (மியான்மர்) தலைநகரான ரங்கூனில் ஏழைக் குழந்தைகளுக்காகக் கல்விச்சாலை நடத்திய வள்ளல்தன்மைக் கொண்ட மதுரைப் பிள்ளை என்பவரின் பெயர்த்தி மீனாம்பாள். அவர் பிறந்த ஊர் ரங்கூன். மீனாம்பாளின் தந்தை வாசுதேவப் பிள்ளை சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடும் அரசியல் பங்கெடுப்பில் ஆர்வமும் கொண்டவர். எனவே, கல்வியும் துணிவும் இயல்பாகவே வாய்த்த மீனாம்பாள் ‘இன்டர் மீடியட்’ எனும் பள்ளி இறுதி நிலை தேர்ச்சி பெற்ற பின் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டார்.

1918-ஆம் ஆண்டு மீனாம்பாள் அவர்களுக்கு அவரது அத்தை மகனும் வழக்கறிஞருமான சிவராஜ் அவர்களுடன் திருமணம் நடந்தது. சிவராஜ் அவர்கள் சென்னை மாநகராட்சியின் முதல் மேயர். பின்னர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனவர். பட்டியலினச் சங்கங்களின் அகில இந்தியக் கூட்டமைப்பின் தலைவர், இந்தியக் குடியரசுக் கட்சியின் தலைவர் உட்பட பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

**காந்தியை ‘மகாத்மா’ என்றழைப்பதுபோல் ஒரு பட்டம் அவருக்கு வழங்கவேண்டும் என்று நானும் டாக்டர் தர்மாம்பாள் மற்றும் நாராயணி அம்மையாரும் ஆலோசனை செய்தோம்!**

இத்தகைய இரு குடும்பப் பின்னணியைப் பெற்ற மீனாம்பாள் அம்மையார், தந்தை பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். பெண் கல்வி, சம உரிமை மற்றும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளுக்காகவும் நீதிக்கட்சி மற்றும் சுயமரியாதை இயக்க நிகழ்வுகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். சுயமரியாதைத் திருமணங்களைத் தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

### ‘பெரியார்’ பெயர்ப் பங்களிப்பில் மீனாம்பாள்

1937-ஆம் ஆண்டில் தொடங்கி, 1939-ஆம் ஆண்டுவரை நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஒரு மக்கள் உரிமைப் போராக உருப்பெற்றது. தமிழறிஞர் மறைமலையடிகளார், ஈழத்தடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோர் உட்பட பல துறையினரும் திரண்டு நின்ற அப்போராட்டத்தை ஒருங்கிணைத்து நடத்தியவர் பெரியார்.

இப்போராட்டத்தில் 1938-ஆம் ஆண்டில் சி.தெ.நாயகம் அவர்களின் தூண்டுதலால், அம்மையார் மீனாம்பாள் அவர்களும் பங்குபெற்றார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் பேரலையாய் அமைந்த தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில், தமிழ்க்கொடியை ஏற்றி வைத்து உரை நிகழ்த்தினார். அந்த மாநாட்டில்தான் அப்பெண் போராளிகள் செயற்கரிய செயல்களைச் செய்துவரும் ஈ.வெ. ரா அவர்களை, இனி **‘பெரியார்’** என்று மட்டுமே அழைக்க வேண்டும் என்று தீர்மானத்துடன் பட்டம் வழங்கினர்.

அந்தப் பட்டம் வழங்கிய முடிவு குறித்துத் தனது இறுதிப் பேட்டியில், “தந்தை பெரியார் அவர்கள், பெரம்பூரில் ஒரு எளிய தோழர் வீட்டுத் திருமணத்தில் பங்கேற்றபோது, மழையினால் சேறும் சகதியுமாய் இருந்த அந்த இடத்தில் அமர்ந்து உணவு உண்ண நாங்களெல்லாம் தயங்கினோம். ஆனால், பெரியாரோ கூரையில் இருந்து ஒரு ஓலையை எடுத்து தரையில் போட்டு அதன் மீதமர்ந்து அந்தத் தோழர்கள் வருந்தாத வண்ணம் உணவுண்டார். அந்தக் காட்சியைக் கண்டு காந்தியை ‘மகாத்மா’ என்றழைப்பதுபோல் ஒரு பட்டம் அவருக்கு வழங்கவேண்டும் என்று நானும் டாக்டர் தர்மாம்பாள் மற்றும் நாராயணி அம்மையாரும் ஆலோசனை செய்தோம்” என்று கூறியுள்ளார்.

அன்றைய ஆளுமை மிக்கப் பெண் போராளிகளின் கூட்டு முடிவாகவே ’பெரியார்’ என்ற பட்டம் வழங்கப்பட்டது என்பதை, அவரே பதிவு செய்து பல குழப்பங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

### ‘உறவல்ல, சமூகமே முக்கியம்!’

சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடிகள் பலரும் அவரவர் பிறந்த சமூகங்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்து வந்தார்கள். அதுபோல் மீனாம்பாள் சிவராஜ் இணையரும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் என்ற குறிக்கோளுடன் உழைத்தனர்.

1939-ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று **தாழ்த்தப்பட்டோர் மாநாடு** நடத்துவதற்காக, தனது நான்கு பவுன் வளையலை விற்று செலவு செய்த அன்னை மீனாம்பாள், அந்த மாநாட்டில் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்காக ‘நீதிக்கட்சி’ ஆற்றிய பணிகளை உணர்ச்சி ததும்ப எடுத்துரைத்தார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்திய அளவில் பட்டியலின மக்களின் ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்கியபோது அதன் தலைவராக தமிழ்நாட்டில் பட்டியலின மக்களின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான எம்.சி.ராஜா அவர்களைத் தலைவராக ஏற்பதாக பல மாநிலங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்நிலையில் மேயர் சிவராஜ் அவர்களும் மீனாம்பாள் அம்மையாரும் டாக்டர் அம்பேத்கர்தான் இந்திய அளவிலான தலைமைப் பொறுப்பை ஏற்கத் தகுதியானவர் என்று உறுதியாக நின்றார்கள்.

அன்றைய சென்னை மாகாணத்தில் நம்மவர், அயலவர் என்ற முரண்களைத் தாண்டி டாக்டர் அம்பேத்கர் அவர்களைத் தலைவராக ஏற்க, வலியுறுத்தியவர் பெரியார். அதே நிலைப்பாட்டினை எந்தச் சமரசமுமின்றி அம்மையார் மீனாம்பாள் அவர்கள் மேற்கொண்டது வியப்பிற்குரியது. ஏனெனில், எம்.சி.ராஜா அவர்கள் மீனாம்பாள்-சிவராஜ் இருவருக்கும் உறவினரும் ஆவார். அதனால் பல உறவினர்கள் அம்மையார் மீனாம்பாளிடம் வந்து தனிப்பட்ட முறையில் பேசி இருக்கிறார்கள்.

என்ன இருந்தாலும், “சொந்தம் முக்கியம் அல்லவா ?” ஆனால், அம்மையாரோ “உறவைவிட சமூகம் முக்கியம்” என்றார்.

“என் சகோதரி மீனாம்பாள்” என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூறியதும், அரசியல் சாசனக் குழுவின் பொறுப்பை ஏற்க அம்பேத்கர் அவர்கள் தயங்கியபோது, அவரை அப்பணியை ஏற்குமாறு வற்புறுத்தியவர், அதனை ஏற்றுக் கொள்ளச் செய்தவர் மீனாம்பாள் அம்மையார் என்ற பெருமையும் அவரது ஆளுமையின் சான்றாகும்.

### பொறுப்புகள் பலவற்றில் ‘முதல்வர்’

அம்மையாரின் அன்பும், அனைவருடனும் இணைந்து பணிசெய்த எளிமையும் அவருக்குப் பலப்பல சிறப்புகளைச் சேர்த்தன. அரசியல், நிர்வாகம் மற்றும் அரசுத்துறை சார்ந்த பொறுப்புகளும் பதவிகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

சென்னை மாநகராட்சியின் துணைமேயர், மாநகராட்சி கவுன்சிலர், கௌரவ நீதிபதி, தணிக்கைக் குழு உறுப்பினர், பல்கலைக்கழக செனட் உறுப்பினர் என இன்னும் பலவற்றில் இடம்பெற்ற முதல் பெண் அவர்தான்.

1964-ஆம் ஆண்டு செப்டம்பரில் சிவராஜ் அவர்கள் காலமானார். தன் அன்பான துணைவரை இழந்த பிறகு, அவரது மகனும் ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரியுமான தயாசங்கர் அவர்களின் குடும்பத்துடன் வாழ்ந்துவந்த மீனாம்பாள் அம்மையார் 1992-ஆம் ஆண்டு மறைந்தார்.

அவர் மறைவதற்குச் சிலகாலம் முன்பு, அவரை நேரில் சந்தித்து நீதிக்கட்சியின் பவளவிழா மலருக்காகப் பேட்டி எடுத்தார் திராவிடர் கழகத்தின் துணைத்தலைவர் கவிஞர் கலி பூங்குன்றன் அவர்கள். அந்தச் சந்திப்பிலும்கூட பெரியார், அம்பேத்கர் ஆகியோரைப் பற்றிப் பேசும்போது அம்மையாரின் அன்பும் மதிப்பும் நெகிழ்ச்சியோடு வெளிப்பட்டது. அந்த உயர்ந்த உள்ளம் திராவிட இயக்க வரலாற்றில் என்றும் ஒளிவிடும் சுடராக இருக்கும்.

(வருவார்கள்...)

---






## அஞ்சுகம் தொடக்கப்பள்ளி!

சென்னை, சூளைமேடு அண்ணா நெடும்பாதையில் இயங்கி வருகிறது அஞ்சுகம் தொடக்கப்பள்ளி. தனியார்ப் பள்ளிகளுக்கு நிகராக அசத்தி வருகிறது இந்து சமய அறநிலையத்துறையின் இந்தப் பள்ளி. தாய்மொழி வழிக் கற்றலுடன், தொடக்கக் கல்விப் பருவத்திலேயே கணினி அறிவு பெற்று வருகின்றனர், இப்பள்ளி மாணவர்கள். இதற்கென கணினி அறையை உருவாக்கியுள்ளார் இப்பள்ளியின் தலைமை ஆசிரியை உமா மகேஸ்வரி. இவர் தனது சொந்த ஆர்வத்தில் உருவாக்கிய **‘அன்னைத் தமிழை ஆர்வமுடன் கற்போம்’** என்கிற தமிழ்க் கையேடு மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தி வருகிறது. இந்தப் பள்ளிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் புதிய கலையரங்கம், மாணவர்கள் உணவருந்தும் கூடம் ஆகியவை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் நலனில் ஆசிரியர்கள் காட்டும் ஈடுபாடே, கற்றல் சிறக்க வழிவகுக்கும். அதற்கு முன்னுதாரணமாக உள்ளது, அஞ்சுகம் தொடக்கப்பள்ளி.

## :.ப்ளாஷ்பேக்





ராதாகிருஷ்ணன்

### கணையாழிக்கு நியாயம்!

மதுரை மாநகரில் 1980-ஆம் ஆண்டில் தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்டபோது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடம் இளைஞர் அணியினரோடு சென்று வாழ்த்து பெற்றிருந்தேன். பிறகு, மதுரை மாவட்ட தி.மு.க. சார்பாக, நவம்பர் 1992-ல் கழக நிதியளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் அவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்று, அதிக நிதி வசூல் செய்து கொடுத்த என்னைப் போன்ற கழகத்தினருக்கு மதுரை பாண்டியன் உணவகத்தில் வைத்து, கணையாழி அணிவித்து உள்ளன்போடு பாராட்டினார். கலைஞர் அளித்த கணையாழிக்கு, நான் நியாயம் செய்திருப்பதாய் உணர்ந்த தருணம் அது.

**-ஜி. ராதாகிருஷ்ணன், கோரிப்பாளையம் பகுதிக் கழகச் செயலாளர் , மதுரை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### பாளையங்கோட்டை சிறை!

**1965-ஆம் ஆண்டு பிப்ரவரியில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. பிப்ரவரி 12-ஆம் தேதி நடைபெற்ற, பொது வேலை நிறுத்தம், சென்னை உட்பட பல நகரங்களை முடக்கியது. கிளர்ச்சியின் விளைவுகளை யோசித்த பேரறிஞர் அண்ணா, போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டுகோள் விடுத்தார். போராட்டங்கள் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், பிப்ரவரி 16 -ஆம் தேதி, தேசியப் பாது காப்புச் சட்டத்தில் கலைஞரைக் கைது செய்தனர். சென்னையிலிருந்து பாளையங்கோட்டைக்கு லாரியில் அழைத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 62 நாட்கள் தனிமைச் சிறைவாசம் அனுபவித்தார் கலைஞர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 169




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.